BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# கனடா தினம் அன்று, மேயர் ப்ரவுன், கவுன்சிலர்கள் ஆகியோரையும், நேரலை இசை மற்றும் பலவற்றையும் நேரில் காண ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்க உலாவரக்கூடிய மகிழ்ச்சியான அனுபவத்தைத் தவற விடாதீர்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 29, 2020) – www.brampton.ca/canadaday எனும் வலைத்தளத்தில் பிராம்ப்டனின் ஆன்லைன் கனடா தின நிகழ்ச்சிக்கும் கூடுதலாக, மேயர் பேட்ரிக் ப்ரவுன் மற்றும் கவுன்சிலர்கள் பிராம்ப்டனின் கனடா தின கொண்டாட்டங்களை திறந்த வெளிக்கு கொண்டு வருகின்றனர்! கவுன்சில் உறுப்பினர்கள் ஜூலை 1 ஆம் தேதி ஒவ்வொரு ஜோடி வார்டுகளுக்கும் நேரடி இசை, உணவு வண்டிகள், மற்றும் உள்ளூர் பேக்கரிகளிலிருந்து இலவச குக்கீஸ்-கள் முதலானவற்றைக் கொண்டு வருவார்கள்.

தனிநபர்கள் முன்னிலையிலான இந்த விழா கொண்டாட்டங்கள், ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மையத்தின் வாகன நிறுத்துமிடங்களில், திறந்தவெளியில் நடைபெறும். COVID-19 தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் குடியிருப்புவாசிகள் அவரவர் வாகனங்களை ஓட்டிவரவும் வாகனங்களிலேயே தங்கியிருக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவரவர் வாகனங்களிலிருந்தபடியே, குடியிருப்புவாசிகள் நேரடி இசையை ரசிக்கலாம் மற்றும் டிரைவ்-த்ரூ உணவு வண்டியிலிருந்து உணவை வாங்கிக் கொள்ளலாம். மேயர் மற்றும் வார்டு கவுன்சிலர்கள் வாகனங்களில் இருப்பவர்களுக்கு இலவச குக்கீகளை சரக்கு தீரும் வரை வழங்குவார்கள்; முகக் கவசங்கள் மற்றும் கையுறைகளை அணிந்தபடி இதனை அவர்கள் செய்வார்கள்.

**முற்பகல் 11 முதல் 11:45 வரை: வார்டுகள் 1 & 5**

340 வோட்டென் ஸ்ட்ரீட் ஈஸ்ட்-இல் உள்ள சென்ச்சுரி கார்டன்ஸ் ரிக்ரியேஷன் மையத்தைப் பார்வையிடுங்கள்; அங்கு மேயர் ப்ரவுன் அவர்களை, கவுன்சிலர்கள் ரொவீனா சான்ட்டோஸ் மற்றும் பால் வின்செண்ட் ஆகியோருடன் காணலாம்! தி ஜாஸ் மெக்கானிக்ஸ் (Jazz Mechanics) லிருந்து நேரடி இசையை அனுபவியுங்கள், தி மைட்டி காப்-லிருந்து உணவை வாங்குங்கள், உள்ளூர் பேக்கரியாகிய அக்கேஷன்ஸ் (OccaSSions) லிருந்து இலவச குக்கீஸ்-உடன் நொறுக்குத்தீனியையும் பெற்று அனுபவியுங்கள்.

**மதியம் 12 முதல் 12:45 வரை: வார்டுகள் 2 & 6**

1050 சாண்டல்வுட் பார்க்வே வெஸ்ட்-இல் உள்ள காஸ்ஸி கேம்ப்பெல் (Cassie Campbell)சமுதாய மையத்தைப் பார்வையிடுங்கள், அப்லெட் மற்றும் கூப்பர் (Ablett and Cooper) வழங்கும் நேரடி இசையை

ரசியுங்கள், தி மைட்டி காப் (Mighty Cob) லிருந்து உணவு வாங்குங்கள், உள்ளூர் கிராண்ட் பேக்கர்ஸ் (Grand Bakers) இடமிருந்து இலவச குக்கீஸ்-களுடன் நொறுக்குத்தீனியையும் பெறுங்கள். மேயர் ப்ரவுன் மற்றும் கவுன்சிலர்கள் மைக்கேல் பல்லேஸ்ச்சி மற்றும் டக் வில்லன்ஸ் ஆகியோர் உங்கள் வாகனத்திற்கே வந்து குக்கீஸ்-களை வழங்குவார்கள்.

**பிற்பகல் 1 முதல் 1:45 வரை: வார்டுகள் 3 & 4**

ப்ராம்ப்ட்டன் ஃபோக் கிளப்பில் இருந்து நேரடி இசையை ரசிக்க, 69 எலியட் தெருவில் இருக்கின்ற மெமோரியல் எரீனாவுக்கு வருகை தாருங்கள்; ஜாமீ'ஸ் க்ராக்ட் கார்ன் –லிருந்து உங்களுக்கான உணவை வாங்குங்கள்; உள்ளூர் கிறிஸ்டினா'ஸ் டோர்ட்டினா ஷாப்-யிலிருந்து இலவச குக்கீஸ்-உடன் நொறுக்குத்தீனியைப் பெறுங்கள்; மேயர் ப்ரவுன் மற்றும் கவுன்சிலர்கள் ஜெஃப் பௌமன் மற்றும் மார்ட்டின் மெடெய்ரோஸ் ஆகியோர் இவற்றை உங்கள் வாகனம் இருக்குமிடத்திற்கே கொண்டு வந்து உங்களுக்கு தருவார்கள்.

**பிற்பகல் 2 மணி முதல் 2:30 வரை: வார்டுகள் 7 & 8**

செல்ட்டிக் பேண்ட் எரின்'ஸ் மார்லோர் (Celtic Band Erin's Marlore) வழங்கும் நேரடி இசையை ரசிக்க 1100 சென்ட்ரல் பார்க் டிரைவ்-இல் உள்ள க்ரீன்பிரையர் ரிக்ரியேஷன் மையத்திற்கு வருகை தாருங்கள்; தி மைட்டி காப்-லிருந்து உணவு வாங்குங்கள், உள்ளூர் கேக்ஸ்(Cakes)-கடையிலிருந்து இலவச குக்கீஸ்-களுடன் நொறுக்குத்தீனியைப் பெறுங்கள்; இந்த சமயத்தில், **எமிலி கே. மேயர் பிரவுன்,** மற்றும் கவுன்சிலர்கள் பேட் ஃபோர்டினி மற்றும் சார்மைன் வில்லியம்ஸ் ஆகியோர் முன்னிலை வகிப்பார்கள்.

**பிற்பகல் 3 மணி முதல் 3:45 வரை: வார்டுகள் 9 & 10**

எண் 10150 இல் உள்ள கோர் மெடோஸ் (Gore Meadows) புல்வெளிகள் இருக்கும் மையத்திற்கு வருகை தாருங்கள்; இங்கு பாகா சிங் வழங்குகின்ற நேரடி இசையைக் கேட்டு ரசியுங்கள், தி மைட்டி காப்-யிலிருந்து உணவை வாங்குங்கள், லாகோஸ்ட் பேக்கரி மற்றும் குக்கீஸ்-பை-டிசைன் ஆகிய உள்ளூர் பேக்கரிகளிலிருந்து இலவச குக்கீஸ்-களைப் பெறுங்கள். இங்கு கவுன்சிலர்கள் மேயர் ப்ரவுன் அவர்களுடன் குர்பிரீத் தில்லான் மற்றும் ஹர்கிரத் சிங் ஆகியோர் இணைவார்கள்.

**கோவிட்-19 தொற்று பரவலுக்கு எதிரான நடவடிக்கைகள்**

கோவிட்-19 தொற்று பரவுதலைத் தடுக்குமுகமாக, உடல் ரீதியான சமூக இடைவெளி நடவடிக்கைகள் நடைமுறையில் இருக்கும், மேலும், கனடா தின அனுபவத்தினைப் பெற, குடியிருப்புவாசிகள் அவரவர் வாகனங்களிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பங்கேற்பாளர்கள் முகக் கவசம்

அணிந்து, ஹாண்ட் சானிட்டைஸர் அல்லது துடைப்பான்கள் போன்ற தனிநபர் கிருமிநாசினிகளை தம்முடன் வைத்திருக்குமாறு நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

**கனடா தினம் –இதை ஆன்லைனில் கொண்டாடுங்கள்!**

ப்ராம்ப்ட்டன் நகர வாசிகள் அவரவர் வீடுகளிலிருந்தபடியே கனடா தினத்தைக் கொண்டாட உதவுவதற்காக, நகர நிர்வாகமானது இந்தக் கொண்டாட்டத்தை ஆன்லைனில் www.brampton.ca/canadaday எனும் வலைத்தளத்தில் கொண்டு வருகிறது. ஜூலை 1 ஆம் தேதி நண்பகல் முதல் இரவு 10 மணி வரை, குடியிருப்புவாசிகள் அனைவரும் தங்கள் நட்பு மற்றும் குடும்பத்தினர் சார்ந்த செயல்பாடுகள், மெய்நிகர் பட்டாசுகள், குடும்பத்தினர் விரும்புகின்றவரும் ஜூனோ (JUNO ) விருது பெற்றவர்களுமான ஸ்பிளாஷ்'அன் பூட்ஸ், உள்ளூர் கலைஞர்கள், ஜூனோ விருது வென்ற தலைவரான வாக் ஆஃப் தி எர்த் மற்றும் பலரின் நிகழ்த்து-கலை நிகழ்ச்சிகளைக் கண்டு அனுபவிக்கலாம்.

மேலும் தகவல்களுக்கு வருகை தாருங்கள்: www.brampton.ca/canadaday.

**அறிஞர் கூற்றுக்கள்**

"கனடா தினம் என்பது ப்ராம்ப்ட்டன் நகரின் மிகப் பெரிய நிகழ்வாகும், இந்த ஆண்டு சிங்க்வாகவ்ஸி (Chinguacousy) பூங்காவில் எல்லோர் முன்னிலையிலும் கொண்டாட்டத்தை நடத்த முடியாது; என்றாலும், கனடா தினத்தை COVID-19 பாதுகாப்பு நடவடிக்கைகளை மனதில் கொண்டு நேரில் கொண்டாட ஒரு வழியை நாங்கள் உருவாக்கியுள்ளோம். வாருங்கள், ஜூலை 1 ஆம் தேதியன்று ஹலோ சொல்லுங்கள், பின்னர் ஆன்லைனில் கொண்டாட வீட்டிற்குச் செல்லுங்கள்! "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கனடா தினத்தை ஒன்றாகக் கூடியிருந்து கொண்டாடுவதற்காக குடியிருப்புவாசிகளை பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான முறையில் சந்திப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். முகக் கவசத்தை அணியுங்கள், நல்ல சுகாதாரம் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள், உணவு, இசை மற்றும் வேடிக்கைக்காக எங்களுடன் நேரில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று அனைவரையும் ஊக்குவிக்கிறேன். பின்னர், நிகழ்ச்சிகளையும் பட்டாசு வேடிக்கைகளையும் ஆன்லைனில், www.brampton.ca/canadaday இல் அனுபவியுங்கள். "

- *குர்ப்ரீத் தில்லான், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, ப்ராம்ப்ட்டன் நகரம், தலைவர், பொருளாதார வளர்ச்சி மற்றும் கலாச்சார அமைப்பு*

"நகரத்தை பாதுகாப்பாக மீண்டும் திறக்க நாங்கள் பணியாற்றவும், கனடாவின் பிறந்தநாளைக் கொண்டாடவும் நமது சமூகம் ஒன்றுகூட இருக்கிறோம்; எனவே எல்லோரும் விழாக்களில் பங்கேற்பது மட்டுமல்லாமல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தபடி, பிராம்ப்டன் முழுவதும் நேரடி பொழுதுபோக்குகளை அனுபவித்துக்கொண்டே, முடிந்தவரை பாதுகாப்பாக கொண்டாடுவதையும் நான் ஊக்குவிக்கிறேன்."

- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்தியக் கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சி பெறுவதற்கான பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்

"மேயரையும் உங்கள் கவுன்சிலர்களையும் சந்திப்பதில் துவங்கி, நேரடி கேளிக்கை பொழுதுபோக்கு, ஆன்லைன் நிகழ்ச்சிகள், குடும்ப- நட்பு செயல்பாடுகள் மற்றும் வாணவேடிக்கை வரை, இந்த கனடா தினத்தை கொண்டாடுவதற்காக, அனைவருக்கும் ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான வழிகள் உள்ளன. தயவுசெய்து பாதுகாப்பாக இருங்கள், சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள், உங்கள் வீட்டிலிருந்தபடியே ஆன்லைனில் இரவு நிகழ்ச்சிகளைக் கண்டு களியுங்கள். "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca